

# அழிக்கப்படும் சாட்சியங்கள்

# Erasure of Evidences

ஆவணக்கையேடு | Documentary Booklet

# THE DEPARTED

While searching for their Forcibly disappeared loved ones

# வலிந்து காணாமலாக்கப்பட்ட

தமது உறவுகளிற்கான தேடலின்போது பலியானவர்கள்

## முன்னுரை

இலங்கையில் காணாமலாக்கப்படுதல் தனியொரு ஒடுக்குமுறைக் கலாசாரமாகவே வளர்ந்திருக்கிறது. அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக குரல்கொடுப்பவர்களை அடக்கவும், அமைதியான முறையில் பாரிய இனப்படுகொலையொன்றை நிகழ்த்தி முடிக்கவும் காணாமலாக்கப்படுதல் என்ற துர்விடயம் கருவியாகப்பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் துயரப் பயணம் தமிழ் மக்கள் வாழ்வில் தொடர் கதையாகவே தொடர்ந்து வருகின்றது. இனிவரும் காலத்தில் இப்படியான காணாமலாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெறாது என்பதற்கும் எவ்வித நம்பிக்கையுமில்லை. பொறுப்புக்கூற வேண்டிய அரசிடமிருந்து பதிலுமில்லை.

ஆனால் கடத்தியவர்கள் அரசின் கூலிப்படையான இராணுவமும், அவர்களோடு சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களும் என்பது பல ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்ட விடயம்.

எனவேதான் காலம் காலமாக கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளும் 2009 இறுதிப்போரில் இராணுவத்திடம் உறவுகளை ஒப்படைத்தவர்களும் தாயாக, மனைவியாக, மகளாக, தந்தையாக, தனயனாக, தங்கையாக வீதியில் இறங்கி நீதி கோரத்தொடங்கினர்.

2009 ஆம் ஆண்டு போர் மௌனிப்புக்கு வந்த நாள் தொட்டே இவ்வகை அறவழிக்கண்ணீர் போராட்டங்கள் முளைக்கத்தொடங்கின. அது 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடுத்த கட்டத்தை அடைந்தது. காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கூட்டாக இணைந்து தெருவில் அமர்ந்து போராடத் தொடங்கினர்.

காணாமலாகிய தம் உறவுகளின் படங்களுடனும், நினைவுகளுடனும், காணாமலாக்கப்பட்டமைக்கான ஆதாரங்களுடனும் வருடக் கணக்கில் தெருவில் அமர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, அம்பாறை என இப்போராட்டம் மூன்று வருடங்கள் தாண்டி நீள்கிறது. வழமையாக இதுமாதிரியாக அரசை கேள்விகேட்கும் பொதுமக்களது போராட்டங்களை

இலங்கை அரசு அனுமதிக்காது. போராடுபவர்களை சுட்டுக்கொல்லும். அச்சுறுத்தி நாட்டைவிட்டு வெளியேறச் செய்யும். அமைதியில் உறையச் செய்யும்.கடந்த 2015 இல் ஏற்படுத்தப்பட்ட நல்லாட்சி, ஜனநாயக வழி போராட்டக்காரர்கள் விடயத்தில் புதிய மூலோபாயம் ஒன்றைக் கடைபிடித்துவருகிறது. போராடுபவர்களை கண்டுகொள்ளாது அப்படியே விட்டுவிடுவது. அவர்களாகப் போராடிக் களைத்து ஓய்ந்து, அரங்கிலிருந்து ஒதுங்கிவிடுவர் என்பதே இந்த மூலோபாயம்.

இவ்வகையான அரசின் போக்கு மூலம் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஜனநாயக உரிமையை தமிழ் மக்கள் அனுபவிக்க நல்வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற விளம்பரம் இலவசமாகக் கிடைத்தது.

ஆனால் மறுபுறமாகப் பார்த்தால், பெரியதொரு இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கிறது. தெருவில் வருடக்கணக்கில் போராடும் முதியவர்கள் பல்வேறு நோய்த்தாக்கங்களினால் இறந்துகொண்டிருக்கின்றனர்.

2017 இல் போராடத்தொடங்கியவர்களில் இதுவரை 75 க்கும் மேற்பட்டவர்கள் இறந்து விட்டனர். அவர்களில் அனேகம்பேர் தனித்த ஆளாக இருந்துகாணாமலாக்கப்பட்ட தம் உறவுகளைத் தேடிவந்தவர்கள். வறுமையாளர்கள்.

வெள்ளைவான்களுக்கும்,இராணுவத்துக்கும் பறிகொடுத்த தம் உறவுகளைத் தவிர வாழ்வில் வேறெந்த பிடிப்புமற்ற வெறுமையாளர்கள். எனவே அவ்வாறான ஒருவரின் இறப்புடன், காணாமலாக்கப்பட்டவரை தேடிவந்த சாட்சியமும் அழிக்கப்படுகிறது. இப்படியாக 75க்கும் மேற்பட்ட சாட்சியங்கள் கடந்த மூன்று வருடங்களுக்குள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இது காணாமலாக்கப்பட்டவர்களை தேடிப்போராடும் சாட்சியங்களை அழிக்கப் பயன்படுத்தப்படும் சதிநிறைந்த மூலோபாயம். சிறுகசிறுக இனத்தை அழிக்கும் செயல். காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதியோ, பொறுப்புக்கூறலோ வழங்காது, கால இழுத்தடிப்பை ஏற்படுத்தி அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலை. இவை அனைத்திற்கு எதிராகவும் போராடும் காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தினராகிய நாம், தொடர்ந்தும் பல்வேறு வழிகளிலும் ஒடுக்குமுறைக்குள்ளாகின்றோம்.

உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றோம். கண்காணிக்கப்படுகின்றோம். புதியபுதிய வடிவிலாக உளச் சிக்கலுக்குள்ளாக்கப்படுகின்றோம். இவ்வாறெல்லாம் தந்திரமிக்க வலைகளை எங்கள் மீது வீசி எம்மையும் எமது போராட்டத்தையும் மலினப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன. இவற்றுக்கு மத்தியில்தான் போராடத்தொடங்கிய நாள்தொட்டு 75 க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களை இழந்திருக்கிறோம்.

இது ஒரு வகையில் சாட்சிய படுகொலை. நீதி கோரும் தரப்பை இல்லாதொழிக்கும் செயன்முறை. இவ்வாறு எம்மோடு போராடத்தொடங்கி, சாட்சிய படுகொலைக்குள்ளானவர்களின் விபரங்களை ஓர் ஆவணமாகத் தொகுத்து உலகின் முன் கொண்டுவருகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்
வடக்கு,கிழக்கு மாகாணங்கள்
*13.09.2020*

# PREFACE

In Sri Lanka enforced disappearance has become a culture. It is used to suppress voices against the government and to enforce genocide. It has been used against Tamil people for several years. There is no guarantee that this will not be used again. There is no response from the government for queries about enforced disappearance. But it is proved that those who are responsible are the Sri Lankan security forces and paramilitary forces affiliated to them.

Because of this reality, mothers, sisters fathers sisters and sons are leading the protest to against the enforced disappearance and to find their disappeared loved ones. Since the end of the war in 2009, there were protests against enforced disappearance and it reached a different level after 2017.

Families of the disappeared jointly held protests on the streets. They have been continuing their protest for the last several years, holding pictures and other details of the disappearance. They held protests in Mullaithivu, killinochi, Vavunia, Trincomalee, Ampari and other places.

Usually, the Government suppress these protests by shooting at them, abuse them and threaten them. But since the new Government came to power in 2015, they allowed them to hold these protests but ignored the protests. Their hope is that families will be tired and give up their protests. This also helps the Government to advertise to the outside world that the new Government is allowing these protests and that Tamils are enjoying democratic rights.

But in reality several of the family members have dies out of sorrow, stress and sickness. Since 2017 over 75 of these relatives who were involved in these protests have died. For these family members searching for their loved ones is the only mission in life and has lost interest in all the activities. With these people dying also erases the evidence for enforced disappearance. Due to this over 75 witnesses for enforced disappearances have been erased.

This is a tactic by the Government to drag on the enforced disappearance without taking any action and weaken the families resolve. We as families of the disappeared are continuing to face abuse and harassment by the authorities. Government is also using other tactics to weaken our resolve.

It is in the mist of these challenges that we lost over 75 of our members who fought against enforced disappearances. Here we have compiled the list of over 75 of our members who died fighting against enforced disappearances.

There are many, many more of the family members who died in silence. The list consists of names of those who were with us in the demonstration and departed during the course of our continuous struggle which commenced on February 20th 2017.

Association for the Relatives of the Enforced Disappearances
North &East Provinces
13.09.2020



மாசிலாமணி புஸ்பராணி

MAASILAMANI PUSHPARANI

வெற்றிலைக்கேணி, யாழ்ப்பாணம்

வயது 63



மாசிலாமணி புஸ்பராணி ( வயது 63) வெற்றிலைக்கேணி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகள் மாசிலாமணி சுவிற்சலா (வயது19) 2008.11.23 அன்று கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் .அன்றிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டார் . மகளை தேடி போராட்டங்களில் ஈடுபட்டிருந்த புஸ்பராணி 23.01.2019 அன்று மரணமடைந்தார் .

Maasilamani Pushparani passed away on January 23, 2019. Her daughter, Maasilamani Suvitsala (age 19) was arrested by the army in Umayalpuram, Kilinochchi on November 23, 2008. She became a victim of enforced disappearance ever since. Pushparani participated in protests in search of her daughter.





கந்தையா நடராஜா
. KANTHIAH NADARAJAH
நல்லூர் யாழ்ப்பாணம்
வயது 82



கந்தையா நடராஜா(வயது 82) ,நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் நடராஜா அகிலரசன் (வயது 23) 1996 .05.18 அன்று சாவகச்சேரி பகுதியில் வைத்து இராணுவ புலனாய்வாளர்களால் கடத்திச்செல்லப்பட்டார். மகன் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதை தொடர்ந்து கொழும்பு உயர்நீதிமன்றில் 1998 இல் வழக்கு தாக்கல் செய்து தனது மகனை கடத்தியவர்களை அடையாளம் காட்டி வாதாடி வந்த நிலையில் போதிய திருப்திகரமான சாட்சிகள் இல்லை என கருதி நீதிமன்று இந்த வழக்கை தள்ளுபடி செய்தது . மகன் பற்றிய கவலைகளால் நோய்வாய்பட்ட நடராஜா 2019.07.21 அன்று மரணமடைந்தார் .

Kanthiah Nadarajah, who was sick passed away on July 21, 2019. His son, Nadarajah Ahilarasan (age 23) was abducted by the military intelligence officers from Chavakachcheri on May 18, 1996. In 1998, Nadarajah filed a case with the High Court of Colombo regarding his son's abduction and identified the abductors in the court. However, the court dismissed the case, stating inadequate evidence.





# ஆறுமுகம் துரைசிங்கம்

ARUMUGAM THURAISINGAM

திருவையாறு,கிளிநொச்சி.

வயது 80



ஆறுமுகம் துரைசிங்கம் (வயது 80) திருவையாறு,கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகள் நிமலநாதன் சுமதி(வயது39 ) , மகளின் கணவர் (மருமகன்) இராமநாதன் நிமலநாதன்(வயது40) ,நிமலநாதன் கலையரசன்(வயது 11),நிமலநாதன் சிந்தரசி(வயது08) ,நிமலநாதன் கோகலை (வயது05) இறுதிப்போரின் 2009 இல் வட்டுவாகல் முல்லைத்தீவில் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டனர் . துரைசிங்கமும் மனைவி அன்னலட்சுமியும் இணைந்து தமது காணாமல் ஆக்கப்பட்ட மகளின் குடும்பத்தை தேடி கடந்த 10 வருடங்களாக போராடி வருகின்றனர் . மகளை பற்றிய கவலையாலும் சின்னஞ் சிறார்களான பேரப்பிள்ளைகளை எண்ணியும் மிகவும் மன உளைச்சலுக்கும் நீண்டநாள் நோய்களுக்கும் உள்ளாகியிருந்த துரைசிங்கம் 2019 பெப்ரவரி மாதம் மரணமடைந்தார் .

Arumugam Thuraisingam who had suffered from prolonged illness and depression due to worries about his missing daughter and grandchildren, passed away in February 2019. His daughter, Nimalanathan Sumathi (age 39), son-in-law, Ramanathan Nimalanathan (age 40), and their children, Nimalanathan Kalaiyarasan (age 11), Nimalanathan Sintharasi (age 8), and Nimalanathan Kokalai (age 5) became victims of enforced disappearance in 2009 during the last phase of the civil war after surrendering to the army in Vadduvakal, Mullaitivu. Thuraisingam along with his wife Annalakshmi had been searching for his daughter and her family for the past ten years.





# சிதம்பரம்பிள்ளை யோகராசா

CHIDAMBARAMPILLAI YOGARASA

கனகாம்பிகைக்குளம் ,கிளிநொச்சி .

வயது 55



சிதம்பரம்பிள்ளை யோகராசா (வயது 55) கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர். இவரின் மகன் அமலன் இறுதிப்போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார். இவர் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படும் புகைப்படம் ஒன்று ஊடகங்களில் வெளியாகியிருந்தது. யோகராசாவின் மனைவி கனகரஞ்சினி வடகிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவியாக செயற்பட்டு வருகின்றார். தனது மகனை தேடி போராட்டம் நடாத்திவருவதோடு காணாமல் அக்கப்பட்டவர்களுக்கான நீதியைக்கோரி பல்வேறு இடங்களுக்கும் சென்று போராடிவருகின்றார். தனது மனைவி கனகரஞ்சினியோடு இணைந்து தனது மகனுக்கான நீதியை கோரி போராட்டம் மேற்கொண்டுவந்த யோகராசா 2018.09.29 அன்று மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார்.

Chidambarampillai Yogarasa died of myocardial infarction on September 29, 2018. His son, Yogarasa Amalan became a victim of enforced disappearance during the last days of the civil war in 2009. A photo of him believed to have been taken while being detained after surrendering to the army was published in the media. His wife, Yogarasa Kanagaranjani is the head of the Association of the Relatives of the Enforced Disappeared from the North and East. She actively pursues justice for her son and other victims of enforced disappearance. While he was alive, Yogarasa took part in many protests along with his wife.





# இராமன் கதிர்வேல்

RAMAN KATHIRVEL

சாந்தபுரம் ,கிளிநொச்சி

வயது 78



இராமன் கதிர்வேல் (வயது 78) சாந்தபுரம் ,கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் 2018.05.11 அன்று மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் . இவரது மூன்று பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். மிகவும் வறுமையான குடும்ப சூழலை கொண்ட இவர் தனது பிள்ளைகளை தேடி அலைந்து ஓய்ந்து நோயாளியாகி உயிரிழந்தார் . இவரது பிள்ளைகளான கதிர்வேல் ரவி (வயது18),கதிர்வேல் பாலசுப்ரமணியம்(வயது 13) ஆகியோர் 1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் இலங்கை இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டனர், மற்றைய மகளான கதிர்வேல் சிவானந்தி (வயது21) 2009 இறுதிப்போரின் இறுதிநாட்களில் வட்டுவாகல் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார் .

Raman Kathirvel died of myocardial infarction on May 11, 2018. His three children became victims of enforced disappearance. His sons, Kathirvel Ravi (age 18) and Kathirvel Balasubramaniam (age 13) disappeared in Ambalkulam, Kilinochchi, an army territory in 1996. His daughter Kathirvel Sivananthi (age 21) disappeared in Vadduvakal during the last days of the civil war in 2009. Amidst poverty, the search for his missing children made him sick and finally took his life.





# ஈஸ்வரன் உருத்திராதேவி

EASWARAN URUTHRADEVI

உதயநகர், கிளிநொச்சி

வயது 52



ஈஸ்வரன் உருத்ராதேவி(வயது52 ) உதயநகர் ,கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் ஈஸ்வரன் ஜனார்த்தனன்(வயது21) 17.05.2009 அன்று இறுதிப்போரின் இறுதிநாட்களில் வட்டுவாகல் பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார் . காணாமல் ஆக்கப்பட்ட மகன் இலங்கை அரசின் பிடியில் இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் தனது மகனை தேடி பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு தொடர்ந்து போராடிவந்தவர்.மகனை பற்றிய கவலைகளால் மிகவும் மனமுடைந்து மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தவர் .2017.08.31 அன்று மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் .

Easwaran Uruthradevi died of myocardial infarction on August 31, 2017. Heartbroken over her missing son, she was severely depressed. Her son, Easwaran Janarthanan (age 21) became a victim of enforced disappearance in Vadduvakal on May 17, 2009 during the last days of the civil war. Believing her son to be in the custody of the Sri Lankan government, she continued to participate in many protests while she was alive.





# வைத்திலிங்கம் யோகரட்ணம்

EASWARAN URUTHRADEVI

வட்டக்கச்சி , கிளிநொச்சி



வைத்திலிங்கம் யோகரட்ணம், வட்டக்கச்சி , கிளிநொச்சி .எனும் முகவரியை சேர்ந்தவர் . இவரது மகள் யோகரத்தினம் விஜிதா (வயது30) இறுதிப்போர் இடம்பெற்ற 2009. 05. 16 அன்று முள்ளிவாய்க்கால் இரட்டைவாய்க்கால் பகுதியில் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த சமயம் இலங்கை இராணுவத்தினரால் விசாரணைக்கு என அழைத்து செல்லப்பட்டவர். அன்றிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். தனது மகள் மீண்டும் தன்னுடன் இணைந்துகொள்வார் என்ற எதிர்பார்ப்புடன் பல்வேறு விதமாக நீதிகோரி போராட்டங்களில் ஈடுபட்டிருந்த யோகரத்தினம் 2019.01.27 அன்று உயிரிழந்தார்
.

Vaithilingam Yogaratnam passed away on January 27, 2019. His daughter, Yogaratnam Vijitha (age 30) surrendered to the army in Irattaivaikkal, Mullivaikkal on May 16, 2009 during the last days of the civil war. She was taken by the army for inquiry and became a victim of enforced disappearance. Yogaratnam took part in various protests in the hope of reuniting with his daughter.





# கனகரத்தினம் மகேஸ்வரி

KANAGARATHTHINAM MAHESHWARI

வட்டக்கச்சி, கிளிநொச்சி

வயது 58



கனகரத்தினம் மகேஸ்வரி (வயது58) வட்டக்கச்சி,கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மூன்று பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.கனகரத்தினம் வஜிரூபன் (வயது 29), கனகரத்தினம் பிரதீபன் (வயது28), கனகரத்தினம் கயதீபன் (வயது 25) ஆகியோர் இறுதிப்போர் இடம்பெற்ற 2009 ஆண்டு சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற சமயம் வெவ்வேறு இடங்களில்வைத்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் . மூன்று பிள்ளைகளை தொலைத்தமையால் மிகவும் மன உளைச்சலுக்கு உள்ளான மகேஸ்வரி மனநலம் பாதிக்கப்பட்டு மனநல சிகிச்சைக்கு உள்ளாகியிருந்தவர் , பிள்ளைகள் வருவார்கள் என்ற ஏக்கத்துடன் தொடர்ந்து போராடிவந்தவர் 2018 .07.05 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் .

Kanagaraththinam Maheshwari died of myocardial infarction on July 05, 2018. Her three sons, Kanagaraththinam Vajiruban (age 29), Kanagaraththinam Pratheepan (age 28), and Kanagaraththinam Kayatheepan (age 25) became victims of enforced disappearance. They disappeared at different places during a displacement in the year 2009 towards the end of the civil war. Losing her three children made her mentally ill and she underwent psychiatric treatment while she was alive. She continued to fight for justice in the hope of seeing her children again.





# துரைசிங்கம் ஈஸ்வரி

THURAISINGAM EASWARI

ஆனந்தபுரம் ,கிளிநொச்சி

வயது 50



துரைசிங்கம் ஈஸ்வரி (50) ஆனந்தபுரம் ,கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் துரைசிங்கம் சதீஷ்கரன் 20.04.2009 அன்று இறுதிப்போரில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் . மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து பல்வேறு விதமாக போராட்டங்களில் கலந்துகொண்டிருந்த ஈஸ்வரி மகனை பற்றிய கவலைகளினாலும் ஏக்கத்தினாலும் நீண்டநாட்களாக உயர் குருதியமுக்க நோயால் பாதிக்கப்பட்டிருந்தவர் 2017.06.22 அன்று உயிரிழந்தார் .

Thuraisingam Easwari, who was suffering from hypertension passed away on June 22, 2017. Her eldest son, Thuraisingam Satheeshkaran became a victim of enforced disappearance on April 20, 2009 during the final phase of the civil war. Easwari participated in various protests in search of her missing son.





# வேலுப்பிள்ளை இராசமணி

VELUPILLAI RASAMANI

கிளிநொச்சி

வயது 77



வேலுப்பிள்ளை இராசமணி (வயது77) கிளிநொச்சியை சேர்ந்தவர் இவரது மகள் இராசமணி கிருசாந்தி 2009 இறுதி யுத்தத்தின் பின்னர் இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். தனது மகள் காணாமல் ஆக் கப்பட்ட நாளிலிருந்து பல்வேறு விதமாக மகளை தேடிய இராசமணி முதுமை பருவத்திலும் கிளிநொச்சியில் இடம்பெற்றுவரும் தொடர் போராட்டத்திலும் பங்கெடுத் திருந்தார் . 2019.08.22 அன்று திடீர் மரணமடைந்தார் .

Velupillai Rasamani passed away suddenly on August 22, 2019. His daughter, Rasamani Kirushanthi became a victim of enforced disappearance after surrendering to the army in 2009 following the end of the civil war. Despite old age, Rasamani took part in the ongoing continuous protest happening in Kilinochchi while he was alive.





# கோணாமலை பொன்னம்பலம்

KONAAMALAI PONNAMBALAM

கைவேலி புதுக்குடியிருப்பு ,முல்லைத்தீவு

வயது 69



கோணாமலை பொன்னம்பலம் ,கைவேலி புதுக்குடியிருப்பு , முல்லைத்தீவு என்னும் முகவரியை சேர்ந்தவர் 2017 .11.22 அன்று உயர் குருதியமுக்கம் காரணமாக 69ஆவது வயதில் மரணமடைந்தார் . காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான பொன்னம்பலம் ஜதீஸ்வரன் (வயது 27) என்பவரை தொடர்ந்து தேடி பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டவர் . இவரது மகன் ஜதீஸ்வரன் இறுதியுத்தம் இடம்பெற்ற வேளை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் வட்டுவாகல் முல்லைத்தீவு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார் .

Konaamalai Ponnambalam passed away on November 22, 2017 due to hypertension. He repeatedly searched for his missing son, Ponnambalam Jatheeswaran (age 27) and participated in many protests. His son surrendered to the army in Vadduvakal, Mullaitivu on May 16, 2009 during the final days of the civil war and became a victim of enforced disappearance.





# செபஸ்தியாம்பிள்ளை ஆரோக்கியநாதர்

SEBASTIAMPILLAI AROKIANATHAR

கைவேலி புதுக்குடியிருப்பு ,முல்லைத்தீவு
வயது 61



செபஸ்தியாம்பிள்ளை ஆரோக்கியநாதர்(வயது 61) ,கைவேலி புதுக்குடியிருப்பு ,முல்லைத்தீவு என்னும் முகவரியை சேர்ந்தவர் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடி பல்வேறு வழிகளில் போராடிவந்தவர் நீண்டநாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விபத்து ஒன்றில் சிக்கி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார் . காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான ஆரோக்கியநாதர் றொய்சன் (வயது 23) என்பவரை தொடர்ந்து தேடிய வண்ணம் பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டவர் . இவரது மகன் றொய்சன் இறுதியுத்தம் இடம்பெற்ற வேளை 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார் .

Sebastiampillai Arokianathar passed away in October 2017 while being treated after meeting an accident. He persistently searched for his missing son, Arokianatha Royson (age 23) and participated in many protests. His son became a victim of enforced disappearance in Iranaipalai, Puthukkudiyiruppu on March 04, 2009 during the final phase of the civil war.





# அந்தோனி அன்ரன் அல்பிரட்

ANTHONY ANTON ALFRED

வள்ளுவர்புரம் விசுவமடு ,முல்லைத்தீவு

வயது 60



அந்தோனி அன்ரன் அல்பிரட்(60) ,வள்ளுவர்புரம் விசுவமடு, முல்லைத்தீவு என்னும் முகவரியை சேர்ந்தவர் 2018.12.25 அன்று 60ஆவது வயதில் மரணமடைந்தார் .மகனைப்பற்றிய யோசனைகள் காரணமாக நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்தவர். வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்தநிலையில் உயிரிழந்தார். காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான அன்ரன் அல்பிரட் புஸ்பராசா (வயது 19) என்பவரை தொடர்ந்து தேடி பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டவர் . இறுதியாக 2018 .12. 10 அன்று சர்வதேச மனிதஉரிமைகள் நாளில் முல்லைத்தீவில் இடம்பெற்ற போராடடத்தில் கலந்துகொண்டு தனது மகனுக்கான நீதியை கோரி போராடியவர் இவரது மகன் இறுதியுத்தம் இடம்பெற்ற வேளை 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார் .

Anthony Anton Alfred passed away on December 25, 2018 while getting treated at a hospital. Worrying about his missing son, he had been sick for a long time. While he was alive, he continued to search for his missing son, Anton Alfred Pushparasa (age 19). He participated in many protests, seeking justice for his missing son. The protest held in Mullaitivu on Human Rights Day (December 10) 2018 was the last protest he took part in. His son became a victim of enforced disappearance in May 2009 during the final days of the civil war in Mullivaikkal





# சண்முகராசா விஜயலக்சுமி

SHANMUGARASA VIJAYALAKSHMI

தேவிபுரம் ,முல்லைத்தீவு

வயது 65



சண்முகராசா விஜயலக்சுமி (வயது 65) தேவிபுரம் ,முல்லைத்தீவு என்னும் முகவரியை சேர்ந்தவர் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன் சண்முகராசா அர்ஜுன் (வயது 19) தேடி பல்வேறு வழிகளில் போராடிவந்தவர். நீண்டநாட்களாக தனது மகனை பற்றிய கவலையால் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர் 2019 ஜனவரி மாதம் 7ஆம் திகதி திடீர் மரணமடைந்தார் . இவரது மகன் அர்ஜுன் இறுதியுத்தம் இடம்பெற்ற வேளை 2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டு எல்லைக்குள் காணாமல் ஆக்கப்பட்டார் .

Shanmugarasa Vijayalakshmi suddenly passed away suon January 07, 2019. Worrying about her missing son, she got sick and was receiving medical treatment. She had been searching for her missing son, Shanmugarasa Arjun (age 19), who became a victim of enforced disappearance in May 2009 within the army territory during the final days of the civil war.





சவரிமுத்து ஜேசுரட்ணம்

SAVARIMUTHU YESURATNAM

புதுக்குடியிருப்பு ,முல்லைத்தீவு .

வயது 70



சவரிமுத்து ஜேசுரட்ணம் (வயது 70) புதுக்குடியிருப்பு ,முல்லைத்தீவு . என்னும் முகவரியை சேர்ந்தவர். காணாமல் ஆக்கப்பட்ட தனது மகள் ஜேசுரட்ணம் மேரி அகல்யா (வயது 24) தேடி பல்வேறு வழிகளில் போராடிவந்தவர். இவரது மகள் 2009 மே மாதம் 18 ஆம் திகதி வட்டுவாகல் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் சரணடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் .மகள் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து தனது மகளை பற்றிய கவலையால் மனநலம் பாதிக்கப்பட்டு பாய்படுக்கையாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் 2019 பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி மரணமடைந்தார் .

Savarimuthu Yesuratnam passed away on February 09, 2019. Worrying about his missing daughter, he got sick and became mentally affected. He had been searching for his missing daughter Yesuratnam Mary Ahalya (age 24), who became a victim of enforced disappearance on May 18, 2009 in Vadduvakal after surrendering to the army.





# செபமாலைமுத்து தெரேசம்மா

SEBAMAALAIMUTHU TERESAMMA

இரணைப்பாலை புதுக்குடியிருப்பு



செபமாலைமுத்து தெரேசம்மா, இரணைப்பாலை புதுக்குடியிருப்பு என்னும் முகவரியை சேர்ந்தவர். காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன் செபமாலைமுத்து ஜெபபிரகாஸ் தேடி பல்வேறு வழிகளில் போராடிவந்தவர்.முல்லைத்தீவில் நடைபெற்றுவரும் தொடர் போராட்டத்திலும் ஈடுபட்டு வந்தவர். இவரது மகன் 2008 ஜூலை மாதம் 1 ஆம் திகதி மன்னார் பகுதியில் கடற்படையினரால் கைதுசெய்யபட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் .மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து அவரை தேடி பல்வேறு வழிகளில் போராடிவந்த தெரேசம்மா மகனை பற்றிய கவலையால் மிகவும் நோய்வாய்ப்படிருந்தார். 24,07,2019 அன்று மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார் .

Sebamaalaimuthu Teresamma passed away on July 24, 2019 due to myocardial infarction. She had been searching for her missing son, Sebamaalaimuthu Jebaprakash and participated in the ongoing continuous protest, which is happening in Mullaitivu. Worries about her missing son made her very sick. Her son became a victim of enforced disappearance on July 01, 2008 after getting arrested by the navy in Mannar.





## வேலுப்பிள்ளை வியாழம்மா

VELUPILLAI VIYAZHAMMA

கேப்பாபுலவு ,முல்லைத்தீவு



வேலுப்பிள்ளை வியாழம்மா (வயது 86) கேப்பாபுலவு, முல்லைத்தீவு .எனும் முகவரியை சேர்ந்தவர் . இவரது மகன் வேலுப்பிள்ளை தியாகராஜா (ரஞ்சன்) 1990 ஆம் ஆண்டு மன்னார் எருக்கலம்பிட்டியில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார் . மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து 30 வருடங்களாக மகனை தேடியே அலைந்து தனது 86 ஆவது வயதில் 2019.07.13 அன்று முதுமைகாரணமாக மரணமடைந்தார் .

Velupillai Viyazhamma died of old age on July 13, 2019. She had been searching for her missing son, Velupillai Thiyagarajah (Ranjan) for the past 30 years. Her son became a victim of enforced disappearance after getting arrested by the navy in Erukkalampiddy, Mannar in the year 1990.





# வேலு சரஸ்வதி

VELU SARASWATHI

மாங்குளம் ,முல்லைத்தீவு

வேலு சரஸ்வதி (வயது 72) மாங்குளம் ,முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது மகள் வேலு சுவிற்றா 2009 இறுதி போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் காணாமல் ஆக்கப்ட்டார் . தனது மகளை தேடி பல்வேறு இடங்களிலும் அலைந்த சரஸ்வதி 2019.02.12 அன்று மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் . மகளை பற்றிய இறுதி சாட்சியான வேலு சரஸ்வதியின் மரணத்துக்கு பின்னர் இவரது மகளை பற்றிய தேடலும் ஓய்ந்துபோனது .

Velu Saraswathi died of myocardial infarction on February 12, 2019. She had been searching for her missing daughter Velu Suvitra, who became a victim of enforced disappearance in 2009 during the last days of the civil war in Mullivaikkal. The search for her daughter came to a close with her death as she was the sole witness to her daughter's enforced disappearance.





# தேவசகாயம் மரியமலர்

## THEVASAGAYAM MARIAMALAR

சிலாவத்தை ,முல்லைத்தீவு .

வயது 69




தேவசகாயம் மரியமலர் (வயது 69) சிலாவத்தை ,முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது மகள் தேவசகாயம் சகாயநாயகி(33வயது) 2009 இறுதி போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார் . மற்றும் இவரது பேரன் புண்ணியமூர்த்தி ஜெயந்தன் (வயது 21) இவரும் இறுதிபோரின்போது 2009ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டார். தனது மகளையும் பேரனையும் தேடி பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டார் .நீண்டநாட்களாக கவலையாலும், மன உளைச்சலாலும் பாதிக்கபட்டிருந்த மரியமலர் 2018.06.13 அன்று மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் .

Thevasagayam Mariamalar died of myocardial infarction on June 13, 2018. She was suffering from anxiety and stress for a long time. Mariamalar's daughter, Thevasagayam Sagayanayagi (age 33) became a victim of enforced disappearance in 2009 during the last days of the civil war in Mullivaikkal. Her grandson, Punniyamoorthy Jeyanthan (age 21) too became a victim of enforced disappearance in 2009 during the last days of war. Searching for her daughter and her grandson, Mariamalar took part in many protests.





## பொன்னுத்துரை திருஞானசம்பந்தர்

PONNUTHURAI THIRUGNANASAMBANTHAR

கணுக்கேணி ,முள்ளியவளை ,முல்லைத்தீவு .

வயது 61



பொன்னுத்துரை திருஞானசம்பந்தர் (வயது 61) கணுக்கேணி, முள்ளியவளை ,முல்லைத்தீவு. எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது மகன் திருஞானசம்பந்தர் வாகீசன் (வயது 19) 2009,04,14 அன்று இறுதி போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார் . தனது மகனை தேடி பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டார். நீண்ட நாட்களாக மகன் பற்றிய கவலையால் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார் . 2019.08.22 அன்று விபத்து ஒன்றில் உயிரிழந்தார் . இதே விபத்தில் இவரது மனைவி ஜெயதேவி படுகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவருகின்றார் .

Ponnuthurai Thirugnanasambanthar died in an accident on August 22, 2019. His wife Jeyadevi is currently undergoing medical treatment after suffering serious injuries in the same accident. Thirugnanasambanthar, who was severely depressed due to worries about his missing son, took part in many protests while he was alive. His son, Thirugnanasambanthar Vakesan (age 19) became a victim of enforced disappearance in Mullivaikkal on April 14, 2009 during the last days of the civil war.





# சபாபதிப்பிள்ளை தனபாலசிங்கம்

SABAPATHIPILLAI THANABALASINGAM

கருநாட்டுக்கேணி ,முல்லைத்தீவு .

வயது 62



சபாபதிப்பிள்ளை தனபாலசிங்கம் (வயது62) கருநாட்டுக்கேணி, முல்லைத்தீவு . எனும் இடத்தினை சேர்ந்தவர் . இவரது மகன் தனபாலசிங்கம் பிரகாஸ் (வயது 20) இறுதிப்போர் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதியை நோக்கி சரணடைவதற்க்காக வருகைதந்த வேளை காணாமல் ஆக்கப்பட்டார் . மகனை தொலைத்த வேதனையுடன் மனைவியுடன் இணைந்து மகனை தேடி போராட்டங்களில் கலந்துகொண்டும் ஆணைக்குழுக்களில் முறையிட்டும் வந்த இவர் 2017 .11.21 அன்று நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார் .

Sabapathipillai Thanabalasingam died of illness on November 21, 2017. His son, Thanabalasingam Prakash (age 20) became a victim of enforced disappearance in Mullivaikkal when he left for the army territory to surrender. The incident happened during the last phase of the civil war in 2009. Having lost his son, Thanabalasingam along with his wife took part in many protests and appealed to various commissions.





# பாவிலு சந்தியோகு

. PAVILU SANTHIYOGU

பெரியபண்டிவிரிச்சான் ,மன்னார்

வயது 70



பாவிலு சந்தியோகு (வயது 70) பெரியபண்டிவிரிச்சான் , மன்னார் . எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் ஜூட் கொலின் (வயது 25) 20.05.2009 ஆம் ஆண்டு மன்னார் மடுத்தேவாலயத்தில் பங்குத்தந்தையின் முன்னிலையில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் அன்றிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் . இவர் சரணடைந்தமைக்கான அனைத்து ஆதாரங்களும் இருக்கின்ற நிலையில் இதுவரையில் இவரது மகன் ஜூட் கொலின் பற்றிய தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை தனது மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தவர் நீண்ட நாட்களாக பல நோய்களுக்கு உள்ளாகியிருந்தார் . 06.01.2019 அன்று திடீர் மரணமடைந்தார்

Pavilu Santhiyogu, who was sick for a long time suddenly passed away on January 01, 2019. His son, Jude Colin (age 25) surrendered to the army on May 20, 2009 in the presence of the priest of the Shrine of Our Lady of Madhu and became a victim of enforced disappearance. Despite all the evidence of his surrender, unable to receive any information on his son, Santhiyogu became severely depressed while he was alive.





# அமலன் லியோன் அசுந்தா பீரிஸ்

**AMALAN LEON ASSUNTA PEIRIS**

முதரிப்புதுறை,மன்னார்.

வயது 55



அமலன் லியோன் அசுந்தா பீரிஸ் (வயது 55) முதரிப்புதுறை,மன்னார் எனும் இடத்தினை சேர்ந்தவர் . 2017.10.14 அன்று மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார் . இவரது கணவன் அமலன் லியோன் ,மகன் ரொஷான் லியோன் வெள்ளைவானில் கொழும்பில் வைத்து கடத்தி செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர் . காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தடுத்து வைத்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருவதை உறுதிப்படுத்தும் வகையில் கொழும்பில் உள்ள இலங்கை கடற்படையின் இரகசிய முகாம் ஒன்றில் இருந்து 9 வருடங்களுக்கு முன்னர் 12 அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்றிற்குரியவரது தாயாரே அசுந்தா பீரிஸ் இது குறித்த வழக்கு விசாரணைகள் கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தநிலையில் இந்த வழக்கு விசாரணையில் பங்குபற்றியிருந்த நிலையில் எப்படியாவது தனது கணவனையும், மகனையும் பார்த்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் நீதி கோரும் போராட்டத்தில் ஓயாது ஈடுபட்டுவந்த இவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் .

Amalan Leon Assunta Peiris died of myocardial infarction on October 14, 2017. Her husband Amalan Leon and her son Roshan Leon were abducted by those who came in a white van in Colombo and became victims of enforced disappearance. Nine years ago, twelve national identity cards were recovered from a secret naval camp in Colombo, confirming those who were abducted are being detained and tortured. Assunta Peiris is the mother of one of the owners of the recovered identity cards. While the case pertaining to this is being heard in a court in Colombo, Assunta tirelessly participated in the struggle for justice for the victims of enforced disappearance in the hope of seeing her husband and son again.





# மரியான் சறோரூபன் குரூஸ்

MARIYAN SARORUBAN CRUZ (RAJAN)

சிலாவத்துறை மன்னார்

வயது 54



மரியான் சறோருபன் குரூஸ் (ராஜன்) (வயது54) சிலாவத்துறை மன்னார் எனும் முகவரியை சேர்ந்தவர் . இவரது மகன் சேவியர் சோதிராஜன் டயஸ் 2007 .09.07 அன்று இடப்பெயர்வு காரணமாக சிலாவத்துறை வீதியால் முருங்கன் நோக்கி சென்றவேளை இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார் . மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து மகனை தேடி பல்வேறு இடங்களிலும் முறைப்பாடு செய்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு போராடிவந்த இவர் 2017.05.08 அன்று மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் .

Mariyan Saroruban Cruz died of myocardial infarction on May 08, 2017. His son, Xavier Sothirajan Dias became a victim of enforced disappearance on September 07, 2007 within the army territory while he was travelling towards Murunkan via Murunkan-Silavathurai Road during a displacement. He had filed complaints with various authorities and participated in the protests in the hope of seeing his son again.





# கந்தையா அரியரெத்தினம்

KANDAIAH ARIYARETHTHINAM

கூமாங்குளம் ,வவுனியா .

வயது 71



கந்தையா அரியரெத்தினம் (வயது 71) கூமாங்குளம் ,வவுனியா எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது இரு மகன்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அரியரெத்தினம் ஜீவரத்தினம்(வயது 18) இவரது மூத்த மகன் 1990 ஆம் ஆண்டு வவுனியா ஓமந்தை பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் . மற்றைய மகன் அரியரெத்தினம் கோபிநாத் 2008 ஆம் ஆண்டு 6 மாதம் 25 திகதி வவுனியா வீரபுரம் பகுதியில் இவரது வீட்டில்வைத்து வெள்ளைவானில் வந்தவர்களால் வலுக்கட்டாயமாக கடத்தி செல்லப்பட்டுள்ளார் . தனது பிள்ளைகளை தேடி அரியரெத்தினம் தனது மனைவியுடன் இணைந்து தொடர்போராட்டங்களில் கலந்துகொண்டிருந்தார் . பிள்ளைகளை பற்றிய கவலையால் மன உளைச்சலுக்கும் கவலையிலும் உள்ளாகியிருந்த அரியரெத்தினம் 26.11.2017 அன்று திடீரென மரணமடைந்தார் .

Kandaiah Ariyareththinam, who was severely depressed due to worries about his missing children, suddenly passed away on November 26, 2017. He and his wife participated in many protests in search of their missing children. Two of his children are victims of enforced disappearance. His eldest son, Ariyareththinam Jeevaraththinam (age 18) went missing in 1990 in Omanthai, Vavuniya. Another son, Ariyareththinam Gopinath was forcibly abducted by those who came in a white van from his home in Veerapuram, Vavuniya in June 25, 2008.





அரியதாஸ் புவனேஸ்வரி

ARIYATHAS BHUVANESHWARI

வவுனியா மாவட்டம்

வயது 64



அரியதாஸ் புவனேஸ்வரி (வயது 64) வவுனியா மாவட்டத்தினை சேர்ந்தவர் . 2018.01.10 அன்று உயிரிழந்தார் . இவரது மகன் அரியதாஸ் விஜயகுமார் கூலி வேலைக்கு செல்பவர் 2000.08.15 வேலைக்கு சென்று வீடு திரும்பிய சமயம் வவுனியா நெளுக்குளம் சந்தியில் இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார் . அன்றைய நாளிலிருந்து தனது மகனை தேடி மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு செய்து 2002 ஆம் ஆண்டு மனித உரிமை ஆணைக்குழுமூலம் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து 6வருடங்களாக வழக்குகளுக்கு சென்றுவந்தார் . 6வருடம் நடைபெற்ற வழக்கில் போதிய சாட்சிகள் இல்லை என தெரிவித்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது . தொடர்ந்தும் தனது மகனுக்ககான நீதியை கோரி பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்ட புவனேஸ்வரி மனதில் உண்டான மகனை பற்றிய கவலைகளால் உயர்குருதியமுக்கம் ,இருதய வருத்தம் போன்ற நோய்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார் .

Ariyathas Bhuvaneshwari passed away on January 10, 2018. She was suffering from hypertension and a cardiovascular disease due to worries about her missing son. Her son, Ariyathas Vijayakumar was arrested by the army on August 15, 2000 in Nelukkulam junction, Vavuniya while returning home from manual work. In search of her son, Bhuvaneshwari appealed to the Human Rights Commission. Through them, she filed a case in High Court, Vavuniya and attended hearings for six years. The case was dismissed after six years, stating inadequate evidence. However, she continued to fight for justice for her missing son and participated in many protests.





இராசநாயகம் டிலாந்தினி

RASANAYAGAM DILANTHINI

வவுனியா மாவட்டம்

வயது 24



இராசநாயகம் டிலாந்தினி (வயது 24) கூமாங்குளம் ,வவுனியா .எனும் இடத்தினை சேர்ந்தவர் . விசேட தேவைக்குட்பட்டவரான இவர் வவுனியாவில் இடம்பெற்றுவரும் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தொடர் போராட்டத்தில் தனது தயாருடன் இணைந்து போராடிவந்தவர் . இவரது சகோதரனான இராசநாயகம் ஜெனிஸ்ராஜ் கடந்த 2007 ம் ஆண்டு நீர் கொழும்பு பகுதியில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார் . தனது சகோதரனை தேடி வறுமைக்கு மத்தியிலும் போராடி வந்த டிலாந்தினி 20.07.2018 அன்று மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் .

Rasanayagam Dilanthini, who is an individual with special needs died of myocardial infarction on July 20, 2018. Amidst poverty, she participated along with her mother in the ongoing continuous protest by the relations of the victims of enforced disappearance, which is happening in Vavuniya. His brother, Rasanayagam Jenisraj was abducted in Negombo in 2007.





வேலாயுதம் செல்வராசா

VELAYUTHAM SELVARASA

ஓமந்தை, வவுனியா,

வயது 56



வேலாயுதம் செல்வராசா (வயது 56) ஓமந்தை, வவுனியா எனும் இடத்தினை சேர்ந்தவர். தனது மகன் செல்வராசா அச்சுதன் (வயது 26) 2009 ஆண்டு மே மாதம் ஓமந்தை இராணுவ சோதனை சாவடியில் கை உயர்த்தி இராணுவத் திடம் கையளித்த நிலையில் அன்றைய நாளிலிருந்து மகனை தேடி அலைந்து தனது மனைவியுடன் இணைந்து போராட் டங்களில் ஈடுபட்டுவந்தவர். இலங்கை இராணுவத்திடம் கையளித்த தனது மகனுக்கு என்ன நடந்தது என்ற ஏக்கத்து டன் நோய்வாய்ப்பட்டிருந்த செல்வராசா வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொண்ட நிலையில் உயர் குருதி அழுத்தம் காரணமாக 20.08.2019 அன்று மரணமடைந்தார்

Velayutham Selvarasa died of hypertension on August 20, 2019. Amidst sickness, he continued to take part in protests along with his wife. His son, Selvarasa Achchuthan (age 26) surrendered to the army at Omanthai checkpoint in May 2009 and became a victim of enforced disappearance. Selvarasa, who had been searching for his son ever since participated in the continuous protest, which is happening in Vavuniya





# தம்பிமுத்து அமரசிங்கம்

THAMBIMUTHU AMARASINGAM

மட்டக்களப்பு

வயது 74



தம்பிமுத்து அமரசிங்கம் (வயது 74 ) மட்டக்களப்பை சேர்ந்தவர். இவரது மகன் அமரசிங்கம் புஸ்பநாதன் மட்டக்களப்பு கற்பான பகுதியில்வைத்து 1990 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்.காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரிய தொடர்போராட்டங்களில் ஈடுபட்டிருந்த அமரசிங்கம் 2019.03.06 அன்று உயிரிழந்தார்

Thambimuthu Amarasingam passed away on March 06, 2019. His son, Amarasingam Pushpanathan became a victim of enforced disappearance in Katpaana, Batticaloa in the year 1990. Amarasingam engaged himself in the struggle for justice for the victims of enforced disappearance until his death.





# முத்துசாமி இராமாஜி

MUTHUSAMY RAMAJI

இராஜதுரைநகர், மட்டக்களப்பு

வயது 86



முத்துசாமி இராமாஜி (வயது 86) இராஜதுரைநகர், மட்டக்களப்பை சேர்ந்தவர் இவரது மகன் முத்துசாமி ரவீந்திரன் 1990.09.23 அன்று வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் அடைக்கலம் புகுந்து அகதியாக தங்கியிருந்தவேளை இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார் . மகன் காணாமல் ஆக்கப்பட்டு 28வருடங்களை தாண்டியும் தனது மகனுக்கு நீதிகோரி போராட்டங்களில் பங்கெடுத்திருந்த இராமாஜி 2019.01.04 அன்று மரணமடைந்தார் .

Muthusamy Ramaji passed away on January 04, 2019. Her son, Muthusamy Raveenthiran was was arrested by the army on September 23, 1990 while staying as a refugee at the Eastern University campus in Vantharumoolai and became a victim of enforced disappearance. Ramaji participated in many protests, seeking justice for her missing son.





## லவநீதன் இளவரசி

**LAVANEETHAN ILAVARASI**

பெரியபோரதீவு, மட்டக்களப்பு

வயது 28



லவநீதன் இளவரசி (வயது 28) பெரியபோரதீவு மட்டக்களப்பை சேர்ந்தவர் இவரது கணவர் சீனித்தம்பி லவநீதன் (வயது 29) 2009.01.06 அன்று மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில்வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் . கணவன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து கணவனின் வருகைக்காக காத்திருந்து நீதிகோரி பல்வேறு தொடர் போராட்டங்களில் பங்கெடுத்திருந்த இளவரசி 2018 .03.08 அன்று இருதய வருத்தம் காரணமாக உயிரிழந்தார் .

Lavaneethan Ilavarasi died of a cardiovascular disease on March 08, 2018. Her husband, Seenithamby Lavaneethan (age 29) was arrested in Vavunathivu, Batticaloa on January 06, 2009 and became a victim of enforced disappearance. Ilavarasi took part in various protests, seeking justice for her missing husband.





# பரமசிவம் தெய்வஈஸ்வரி

PARAMASIVAM THEIVAEASWARI

செங்கலடி , மட்டக்களப்பு

வயது 58



பரமசிவம் தெய்வஈஸ்வரி (வயது 58)செங்கலடி மட்டக்களப்பு எனும் இடத்தினை சேர்ந்தவர் இவரது மகன் பரமசிவம் பிரசாந்தன் (வயது 16) 2005.05.04 அன்று செங்கலடி பகுதியில் வைத்து இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய துணைக்குழுக்களால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து மன உளைச்சலுக்கு ஆளான தெய்வஈஸ்வரி நீதிகோரிய தொடர் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்தியிருந்தார் . 2018.06.22 அன்று மாரடைப்பு காரணமாக . மரணமடைந்தார் .

Paramasivam Theivaeaswari, who was severely depressed died of myocardial infarction on June 22, 2018. Her son, Paramasivam Prashanthan (age 16) was abducted by a paramilitary group from Chenkaladi on May 04, 2005 and became a victim of enforced disappearance. Theivaeaswari engaged herself in struggle for justice for the victims of enforced disappearance thereafter.





# மகேந்திரன் உதயராணி

MAHENDRAN UTHAYARANI

தன்னாமுனை ,மட்டக்களப்பு



மகேந்திரன் உதயராணி ,தன்னாமுனை ,மட்டக்களப்பை சேர்ந்தவர் இவரது மகன் மகேந்திரன் கோபால் 1990.09.05 அன்று வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். மகன் காணாமல் ஆக்கப்பட்ட மகனுக்கான நீதியைக்கோரி தொடர்ந்து போராடிவந்த உதயராணி 2018.07.02 அன்று உயிரிழந்தார் .

Mahendran Uthayarani passed away on July 02, 2018. Her son, Mahendran Gopal was arrested by the army at Eastern University campus in Vantharumoolai on September 05, 1990 and became a victim of enforced disappearance. Uthayarani pursed justice for her missing son until her death.





## அழகிப்போடி சந்திரகேசரி

### AZHAKIPPODI CHANDRAKESARI

வெல்லாவெளி மட்டக்களப்பு



அழகிப்போடி சந்திரகேசரி (வயது 72) வெல்லாவெளி மட்டக்களப்பை சேர்ந்தவர் இவரது மகன் சந்திரகேசரி சிவகுமார்(வயது17) 1999 வெல்லாவெளி பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார். மகனைத்தேடி பல இடங்களில் முறையிட்ட சந்திரகேசரி நீதிகோரி இடம்பெறும் போராட்டங்களில் தொடர்ந்து பங்கெடுத்துவந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு உயர்குருதியமுக்கம் காரணமாக மரணமடைந்தார் .

Azhakippodi Chandrakesari died of hypertension in 2019. His son, Chandrakesari Sivakumar (age 17) was made a victim of enforced disappearance in Vellaveli in the year 1999. Chandrakesari appealed to various parties about his missing son and had been a constant presence in protests seeking justice for the victims of enforced disappearance.





# சந்திரசேகரம் ஞானசௌந்தரி

CHANDRASEKARAM GNANASOUNDARI

வெல்லாவெளி மட்டக்களப்பு



சந்திரசேகரம் ஞானசௌந்தரி (வயது 68) வெள்ளாவெளி ,மட்டக்களப்பை சேர்ந்தவர் 10.09.2018 அன்று மரணமடைந்தார் இவரது மகன் 1997 ஆம் ஆண்டு வெள்ளாவெளியில் காணாமல் ஆக்கப்பட்டார். மகனை தேடி பல்வேறு நீதிகோரிய போராட்டங்களில் இறக்கும்வரை ஈடுபட்டுவந்த ஞானசௌந்தரி காணாமல் ஆக்கப்பட்ட தனதுமகனை தேடிய இறுதி சாட்சி ஆவார் .

Chandrasekaram Gnanasoundari passed away on September 10, 2018. Her son was made a victim of enforced disappearance in Vellaveli in the year 1997. Seeking justice for her missing son, Gnanasoundari engaged herself in various protests until her death. She was the last witness for her son's disappearance.





## கந்தசாமி பரமேஸ்வரி

KANTHASAMY PARAMESHWARI

தம்பலகாமம் ,திருகோணமலை .

வயது 65



கந்தசாமி பரமேஸ்வரி (வயது 65) தம்பலகாமம் ,திருகோணமலை .எனும் முகவரியை சேர்ந்தவர் . இவரது மூன்று மகன்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் . கந்தசாமி கெங்காதரன் 1990 ஆம் ஆண்டு திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்டார் .கந்தசாமி கிறிஸ்ணகரன் 1999 ஆம் ஆண்டு திருகோணமலையில் வைத்து காணாமல் ஆக்கப்பட் டார் . கந்தசாமி முரளிதரன் 2008 ஆம் ஆண்டு தம்பலகாமம் திருகோணமலையில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார் . பிள்ளைகள் அடுத்தடுத்து காணாமல் ஆக்கப்பட்டமையால் மன உளைச்சலுக்கும் கவலைக்கும் உள்ளாகியிருந்த பரமேஸ்வரி தொடர்ந்து பிள்ளைகளை தேடி போராட்டங்களில் கலந்துகொண்டிருந்த நிலையில் 2015.05.05 அன்று காலமானார்.

Kanthasamy Parameshwari passed away on May 05, 2015. Her three sons became victims of enforced disappearance. Kanthasamy Gengatharan disappeared in 1990. Kanthasamy Krishnakaran disappeared in 1999. Both went missing in the city of Trincomalee. Kanthasamy Muralitharan went missing in Thampalakamam in the year 2008. Parameshwari took part in various protests even though she was depressed and worried due to the subsequent disappearance of her children.





# வீரகத்தி அமிர்தலிங்கம்

KANTHASAMY PARAMESHWARI

தம்பலகாமம் ,திருகோணமலை .

வயது 67



வீரகத்தி அமிர்தலிங்கம் (வயது 67) தம்பலகாமம், திருகோணமலை எனும் முகவரியை சேர்ந்தவர் . அமிர்தலிங்கம் மதன் (வயது 22) என்ற இவரது மகன் 2008.05.15 அன்று இராணுவ புலனாய்வாளர்கள் என தம்மை அடையயாளப்படுத் தியவர்களால் பிடித்து செல்லப்பட்ட நிலையில் காணாமல் ஆக் கப்பட்டார் .மகனின் பிரிவினால் துவண்டுபோன அமிர்தலிங்கம் மகனுக்காக நீதிகோரி பல்வேறு தரப்புகளிடம் முறையிட்டார். தொடர்ந்து மனைவியோடு இணைந்து போராட்டங்களிலும் பங்கெடுத்தார் . 2017.11.30 அன்று மாரடைப்பு காரணமாக திடீர் மரணமடைந்தார் .

Veerakaththi Amirthalingam died of myocardial infarction on November 30, 2017. Her son, Amirthalingam Mathan (age 22) became a victim of enforced disappearance after taken away by those who identified themselves as military intelligence officers on May 15, 2008. Amirthalingam appealed to various parties about his missing son. He continued to participate in protests with his wife.





# சுந்தரம்பிள்ளை அருந்தவம்

SUNTHARAMPILLAI ARUNTHAVAM

கிளிவெட்டி ,திருகோணமலை

**வயது 84**



சுந்தரம்பிள்ளை அருந்தவம் (வயது 84) கிளிவெட்டி, திருகோணமலை எனும் இடத்தினை சேர்ந்தவர் . இவரது மகன் சுந்தரம்பிள்ளை மோகனராஜன்(வயது 18) 1998.07.04 அன்று தோப்பூர் திருகோணமலையில் வைத்து காணாமல் ஆக்கப்பட் டார் . மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து மகனை தேடி அலைந்து பல்வேறு போராட்டங்களிலில் கலந்துகொண்டு மகனை தேடி நீதிகோரி போராடிய அருந்தவம் 2018.07.01 அன்று திடீர் மரணமடைந்தார் .

Suntharampillai Arunthavam passed away suddenly on July 01, 2018. Her son, Suntharampillai Mohanarajan (age 18) became a victim of enforced disappearance in Thoppur, Trincomalee on July 04, 1998. She participated in various protests in search of her missing son.





# நவரத்தினம் பத்மாவதி

NAVARATHINAM PATHMAVATHI

கிளிவெட்டி ,திருகோணமலை

வயது 61



நவரத்தினம் பத்மாவதி (வயது 61),கிளிவெட்டி, திருகோணமலை எனும் இடத்தினை சேர்ந்தவர் . இவரது மகன் நவரத்தினம் குகேந்திரன் (வயது 14) 1995.08.07 அன்று கிளிவெட்டி பகுதியில் வயல் வேலைக்கு சென்றவர். அன்றிலிருந்து வீடு திரும்பவில்லை மகன் காணாமல் ஆக் கப்பட்ட நாளிலிருந்து மகனை தேடி அனைத்து இடசங்களிலும் முறைப்பாடு செய்து தொடர்ந்து நீதிகோரிய போராட் டங்களிலும் ஈடுபட்டிருந்த பத்மாவதி 07.05.2018 அன்று மரணமடைந்தார் .

Navarathinam Pathmavathi passed away on May 07, 2018. Her son, Navarathinam Kugenthiran (age 14) went to work on a paddy field in Kiliveddy on August 07, 1995 but did not return home. Pathmavathi appealed to various parties regarding her missing son and took part in various protests in the hope of getting him back.





# ராமன் கமலம்

RAMAN KAMALAM

கப்பல்துறை ,திருகோணமலை

வயது 70



ராமன் கமலம் (வயது 70) கப்பல்துறை ,திருகோணமலை எனும் இடத்தினை சேர்ந்தவர் .இவரது மகன் கிறிஸ்ணகுமார் (வயது 26) 1990.07.15 அன்று திருகோணமலை சீனன்குடா விமானப்படைத்தளத்தில் பணியாளராக வேலைக்கு சென்றவர் வீடுவரவில்லை . மகன் காணாமல் ஆக்கக்கப்பட்ட நாளிலிருந்து மகனை தேடி பல்வேறு இடங்களுக்கும் சென்று முறையிட்டு நீதிகோரிய போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்தியிருந்த கமலம் 2018ஆம் ஆண்டு மரணமடைத்தார் .

Raman Kamalam passed away in the year 2018. Her son, Krishnakumar (age 26) worked at the air force base at China Bay, Trincomalee. He went to work on July 15, 1990 but did not return home. Kamalam appealed to various parties regarding her missing son and participated in various protests.





# சிவகுரு பார்வதி

SIVAGURU PARVATHI

தம்பிலுவில் அம்பாறை



சிவகுரு பார்வதி ,தம்பிலுவில் அம்பாறை எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் சிவகுரு சிவகுமார் 1998.06.18 அன்று அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பகுதியில்வைத்து காணாமல் ஆக் கப்பட்டார் . மகனை தேடிய போராட்டங்களில் ஈடுபட்டிருந்த பார்வதி 2016.10.26 அன்று மரணமடைந்தார் .

Sivaguru Parvathi passed away on October 26, 2016. Her son, Sivaguru Sivakumar became a victim of enforced disappearance in Kanchikudichchaaru, Ampara on June 18, 1998. Parvathi had been fighting to get her son back.





# இளையதம்பி பூமணி

ILAIYATHAMBI POOMANI

திருக்கோவில் ,அம்பாறை



இளையதம்பி பூமணி, திருக்கோவில் ,அம்பாறை எனும் இடத்தினை சேர்ந்தவர் 2019 ,05.27 அன்று திடீர் மரணமடைந்தார் . இவரது மகன் இளையதம்பி தர்மராசா 1995.05.10 அம்பாறை சாகாமம் பகுதிக்குசென்றவர் திரும்ப வீடுவரவில்லை மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மகனைப்பற்றிய தேடல்களில் ஈடுபட்டிருந்த பூமணி தொடர் போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்தார் .

Ilaiyathambi Poomani passed away suddenly on May 27, 2019. Her son, Ilaiyathambi Tharmarasa went to Sagamam, Ampara on May 10, 1995 but did not return home. In search of her missing son, Poomani participated in various protests.





## வேலுப்பிள்ளை கதிர்காமத்தம்பி

VELUPILLAI KATHIRGAMATHAMBY

அம்பாறை



வேலுப்பிள்ளை கதிர்காமத்தம்பி அம்பாறை மாவட்டத்தை சேர்ந்தவர் .இவரது மகன்கள் கதிர்காமத்தம்பி மகேந்திரன் 1990 ஆம் ஆண்டு அம்பாறையிலும் கதிர்காமத்தம்பி மனோகரன் 1991 அம்பாறையில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர் . பிள்ளைகளின் பிரிவால் துவண்டுபோனா கதிர்காமத்தம்பி பல்வேறு போராட்டங்களின் மூலம் நீதிகோரி தொடர்ந்து போராடிவந்தார் . 2017.10.21 அன்று மரணமடைந்தார் .

Velupillai Kathirgamathamby passed away on October 21, 2017. His son, Kathirgamathamby Mahendran went missing in Ampara in the year 1990. In the following year (1991), his other son, Kathirgamathamby Manoharan also went missing in Ampara. Kathirgamathamby participated in various protests in the hope of reuniting with his sons.





# கனகரத்தினம் காந்தமலர்

KANAGARATHTHINAM KANTHAMALAR

திருக்கோவில் அம்பாறை



கனகரத்தினம் காந்தமலர் திருக்கோவில் அம்பாறை எனும் இடத்தினை சேர்ந்தவர் 2019.06.04 அன்று மரணமடைந்தார். இவரது மகன் கிறிஸ்ணபிள்ளை குணசேகரன் 1990.10.07 அன்று திருக்கோவில் பகுதியில் வயலுக்கு சாப்பாடு கொண்டு சென்ற சமயம் இராணுவத்தால் பிடித்து செல்லப்பட்டார் . இன்னொருமகன் கிறிஸ்ணபிள்ளை தினேஸ்கரன் 1990 .07.10 அன்று கொழும்பில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் வேலைக்கு சென்றவர் அங்குவைத்து இராணுவத்தால் பிடித்து செல்லப்பட்டார் .

Kanagaraththinam Kanthamalar passed away on June 04, 2019. Her son, Krishnapillai Gunasekaran was arrested and taken away by the army on October 10, 1990 while taking meals to their paddy field in Thirukkovil. Her another son, Krishnapillai Thineshkaran, who was employed at a private company in Colombo was arrested at his workplace and taken away by the army on July 10, 1990.





# தெய்வேந்திரன் இந்திரா

THEIVENTHIRAN INTHIRA

விநாயகபுரம் அம்பாறை



தெய்வேந்திரன் இந்திரா ,விநாயகபுரம் அம்பாறையினை சேர்ந்தவர் இவரது மகன் தெய்வேந்திரன் பிரகாஸ் 2005 ஆம் ஆண்டு பாடசாலைக்கு சென்ற சமயம் காணாமல் ஆக்கப்பட் டார்.மகனை தேடி பல்வேறு இடங்களிலும் அலைந்த இந்திரா 2018.11.03 அன்று மரணமடைந்தார் .

Theiventhiran Inthira, who was searching for her missing son in various places died on November 03, 2018. Her son, Theiventhiran Prakash became a victim of enforced disappearance in 2005. He went to school but did not return home.





# வைரமுத்து மயில்வாகனம்

VAIRAMUTHU MAYILVAGANAM

திருக்கோவில், அம்பாறை



வைரமுத்து மயில்வாகனம் ,திருக்கோவில் ,அம்பாறையினை சேர்ந்தவர் இவரது மூன்று பிள்ளைகள் .1992 .04.29 அன்று மட்டக்களப்பு வாளைச்சேனையில் வைத்து இராணுவத்தினரால் காணாமல் ஆக்கப்பட்டனர். தனராஜினி(வயது 19), ஜெயராஜினி(வயது16)ராஜேஸ்வரன்(வயது 09) ஆகிய தனது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து பிள்ளைகளை தேடி பல இடங்களில் முறையிட்டு நீதி கேட்டு போராடிய மயில்வாகனம் 2016.04.29 அன்று உயிரிழந்தார் .

Vairamuthu Mayilvaganam passed away on April 29, 2016. His three children were made victims of enforced disappearance by the army in Valaichchenai, Batticaloa on April 29, 1992. Thanarajini (age 19), Jeyarajini (age 16), and Rajeshwaran (age 9) are the names of his children who went missing. He had been searching for his children in various places and continued to seek justice for them.





# தியாகராஜா ஞானம்மா

THIYAGARAJAH GNANAMMA

அக்கரைப்பற்று , அம்பாறை



தியாகராஜா ஞானம்மா அக்கரைப்பற்று , அம்பாறை .எனும் இடத்தினை சேர்ந்தவர் இவரது இரண்டு மகன்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.தியாகராஜா மகேந்திரன் 1990 இல் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். தியாகராஜா நமச்சிவாய 1998 இல் அக்கரைப்பற்று நகரில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்டார். தனது பிள்ளைகளை தேடி நீதிகோரி தொடர்போராட்டங்களில் ஈடுபட்டிருந்த ஞானம்மா 2019.06.10 அன்று உயிரிழந்தார் .

Thiyagarajah Gnanamma passed away on June 10, 2019. Her two sons became victims of enforced disappearance. Thiyagarajah Mahendran went missing after getting arrested by the army in 1990. Thiyagarajah Namachchivayam was arrested in a military roundup in Akkaraipattu in the year 1998. Gnanamma was engaged in continuous protests in search of her missing sons.





சின்னத்தம்பி முத்துலிங்கம்

SINNATHAMBY MUTHULINGAM

தம்பிலுவில் ,அம்பாறை

வயது 70



சின்னத்தம்பி முத்துலிங்கம்(வயது 70) ,தம்பிலுவில், அம்பாறையினை சேர்ந்தவர் இவரது மகன் முத்துலிங்கம் வசந்தராஜன்(வயது 17) 1990 ஆம் ஆண்டு அம்பாறையில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார். மகன் தொடர்பில் நீதிகோரி போராட்டங்களில் பங்கெடுத்திருந்த முத்துலிங்கம் 2017 .03.20 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் .

Sinnathamby Muthulingam died of myocardial infarction on March 20, 2017. His son, Muthulingam Vasantharajan (age 17) became a victim of enforced disappearance in Ampara in the year 1990. Muthulingam participated in many protests, seeking justice for his missing son.





# குருநாதபிள்ளை திரவியம்

## GURUNATHAPILLAI THIRAVIYAM

திருக்கோவில் அம்பாறை



குருநாதபிள்ளை திரவியம் திருக்கோவில் அம்பாறையினை சேர்ந்தவர் இவரது மகன் குருநாதபிள்ளை ரகுநாதன் 2000.10.29 அன்று அம்பாறையில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார் , மகனை தேடி பல்வேறு இடங்களுக்கும் சென்று முறையிட்டு நீதிகோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த திரவியம் 2019.07.05 அன்று மரணமடைந்தார்.

Gurunathapillai Thiraviyam passed away on July 05, 2019. His son. Gurunathapillai Ragunathan became a victim of enforced disappearance in Ampara on October 29, 2000. Thiraviyam appealed to various parties regarding his missing son and was engaged in continuous protests.





# பொன்னம்பலம் சிவலிங்கம்

PONNAMBALAM SIVALINGAM

விநாயகபுரம் ,அம்பாறை



பொன்னம்பலம் சிவலிங்கம்(வயது79) ,விநாயகபுரம், அம்பாறையினை சேர்ந்தவர் இவரது மகன் சிவலிங்கம் தெய்வேந்திரன் 1990 ஆம் ஆண்டு அம்பாறை விநாயகபுரம் பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார்.மகனை தேடி போராடிவந்த சிவலிங்கம் 2018.12.05அன்று உயிரிழந்தார் .

Ponnambalam Sivalingam passed away on December 05, 2018. His son, Sivalingam Theiventhiran became a victim of enforced disappearance in Vinayagapuram, Ampara in the year 1990. Sivalingam continued to fight for justice for his missing son until his death.





சின்னையா கண்ணம்மா
SINNIAH KANNAMMA
கிளிநொச்சி
(வயது 77)



சின்னையா கண்ணம்மா (77-வயது) மருதநகர் கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் சின்னையா பிரசாந்தன் (வயது 36) 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதுமாத்தளன் பகுதியில் படையினரிடம் சரணடைந்த வேளை காணாமல் ஆக்கபட்டார். தனது கடைசி மகன் காணாமலாக்கப்பட்ட நிலையில் 10 ஆண்டுகளாக அவரை, குறித்த தாய் தேடிவந்துள்ளார். காணாமல் ஆக்கப்படோரின் உறவுகளினால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டத்திலும் பங்கெடுத்த இவர் 2020.01.19 அன்று வயது முதிர்ந்த நிலையில் மகன் பற்றிய ஏக்கத்துடனேயே பதில்கள் ஏதும் இன்றி மரணமடைந்தார்.

Mrs. Sinniah Kannammah Age-77 is from Maruthanagar Kilinochchi.
Her son Sinnaiah Prasanthan Age-36 had disappeared after surrendering to the Srilanka Army at Puthumathalan (Mullaitivu District).
Mrs.Sinnaiah Kannammah who took part in the demonstrations carried out by the Association for the relatives of the Enforced Disappearance had died on the 19-01-2020 at her old age due to frustrations without knowing any information regarding his son.





## இராஜரட்ணம்

RAJARATNAM

ஆனந்தபுரம் ,கிளிநொச்சி

(வயது 67)



இராஜரட்ணம் (வயது 67) ஆனந்தபுரம் ,கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் இராஜரட்ணம் ஜீவரட்ணம் (26) 2003 ஆண்டு காலப்பகுதியில் காணாமல் ஆக்கபட்டார் . மகன் காணாமல் ஆக்கபட்ட நாளிலிருந்து மகனை தேடும் படலத்தை மனைவியோடு இணைந்து மேற்கொண்ட இவர் காணாமல் ஆக்கபட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த தொடர் போராட்டங்களிலும் பங்கெடுத்திருந்தார். 2020 . ஜூலை மாதம் இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிக்கி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார்.

Mr. RajaratnamAge-67 was a resident of Anantha-puram, Kilinochchi
His son RajaratnamJeevaratnam Age-26was made to disappear in the year 2003.
He was engaged in the demonstrations carried out by the Association for the Relatives of Enforced Disappearances together with his wife seeking justice for the release of his son met with an accident on 23-07-2020 and subsequently died while taking treatment.





கிருஸ்ணபிள்ளை கணபதிப்பிள்ளை

APPUKAMI RAMBANDA

கொக்கட்டி சோலை மட்டக்களப்பு

(வயது 84)



கிருஸ்ணபிள்ளை கணபதிப்பிள்ளை (வயது 84) கொக்கட்டி சோலை மட்டக்களப்பு எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் கணபதிப்பிள்ளை ஸ்ரீதரன் மட்டக்களப்பில் இனந்தெரியாதவர்களால் பலவந்தமாக கடத்தி செல்லப்பட்ட நிலையில் அன்றிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டார் . மகனை தேடி நீதிகோரிய தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த கணபதிப்பிள்ளை 2020.02.29அன்று மகன் குறித்த தகவல்கள் இன்றியே வயது முதிர்ந்த நிலையில் மரணமடைந்தார்

Krishnapllai Kanapathippillai is from Kokkaddicholai, Batticaloa. His son Kanapathippillai Sritharan was abducted by some unidentified persons in Batticaloa and made to disappear since then. Mr.Kanapathippillai who was engaged in the demonstrations seeking justice for the release of his disappeared son had died on 29.02.2020 without knowing the whereabouts of his son at his old age.





அப்புகாமி ரம்பண்டா
APPUKAMI RAMBANDA
உன்னிச்சை மட்டக்களப்பு
(வயது 77)



அப்புகாமி ரம்பண்டா (வயது 77) உன்னிச்சை மட்டக்களப்பு எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் ரம்பண்டா அபயரட்ணம் 2008.09.15 அன்று மட்டக் களப்பில் உள்ள தனது வீட்டில்வைத்து நள்ளிரவு 1 மணியளவில் இனந்தெரியாதவர்களால் பலவந்தமாக கடத்தி செல்லப்பட்ட நிலையில் அன்றிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டார் . மகனை தேடி நீதிகோரிய தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த அப்புகாமி ரம்பண்டா 2019.07.20 அன்று நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார்

Appuhamy Ranbanda is from Unnichchi, Batticaloa. His son Ranbanda Suresh was abducted by unidentified persons forcibly on 15.09.2008 around 01 o' clock in the midnight while he was at home at Batticaloa. Since then he is disappeared. Appuhamy Ranbanda who engaged in the protest for justice for the release of his son had died on 20.07.2019 after falling sick.





புதுராசா அங்கம்மா
PUTHURASA ANGAMMA
காஞ்சிரங்குடா அம்பாறை



புதுராசா அங்கம்மா தங்கவேலாயுதபுரம் அம்பாறை எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் புதுராசா சின்னத்தம்பி தங்கவேலாயுதபுரம் பகுதியில் 1996.03.18 இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பலவந்தமாக பிடித்து செல்லப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட் டார் . இராணுவம் தனது மகனை பிடித்து சென்றதை இவருடைய தந்தை புதுராசா நேரடியாக பார்த்துள்ளார். மகனை தேடி நீதிகோரிய தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த புதுராசா அங்கம்மா முதுமை நிலையை அடைந்த நிலையில் 2020.01.15 அன்று நோய்வாய்ப்பட்ட நிலையில் மரணமடைந்தார் .

Mrs.Puthurasa Ankammah is from Thangavelau-thapuram, Ampara. Her son Puthurasa Sinnathamby had been abducted by the Sri Lankan Army forcibly in a round up at Thangavelauthapuram on 18.03.1996 together with many other youths. He had gone missing since then. His father Puthurasa had seen this incident directly. Mrs.P.Ankammah who was engaged in our protest for Justice in search of her son had died on 15.01.2020 due ill health at her old age.





சிவசுப்ரமணியம் பத்மராசா
SIVASUBRAMANIAM PATHMARASA
காஞ்சிரங்குடா, அம்பாறை
(வயது 68)



சிவசுப்ரமணியம் பத்மராசா(வயது 68) காஞ்சிரங்குடா அம்பாறை எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் பத்மராசா சிவாகரன்(வயது 17) 2000.07.17 அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பகுதியில் இலங்கை இராணுவத்தினரால் பலவந்தமாக பிடித்து செல்லப்பட்ட நிலையில் அன்றிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டார் . மகனை தேடி நீதிகோரிய தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த பத்மராசா 2020.07.10 அன்று நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார் .

Sivasubramaniam Pathmarasa is from Kanchirankuda, Ampara.His son Pathmarasa Sivaharan was forcibily abducted by the Sri Lankan Army at Kanchikudichcharu Ampara and had gone missing since then. Pathmarasa who was engaged in continuous protest seeking justice for the release of his son had died on 10.07.2020 due to ill health.





கணபதிப்பிள்ளை சிவநேசராசா , சிவநேசராசா கனகம்மா

KANAPATHIPILLAI SIVANESARASA, SIVANESARASA KANAKAMMA

திருக்கோவில் அம்பாறை



கணபதிப்பிள்ளை சிவநேசராசா ,சிவநேசராசா கனகம்மா திருக்கோவில் அம்பாறையினை சேர்ந்தவர்கள் .இவர்களது பிள்ளைகள் சிவநேசராசா வசந்தகுமார் , சிவநேசராசா லீலா, சிவநேசராசா மாலினி ஆகியோர் அம்பாறையில் வெவ்வேறு தினங்களில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் . பிள்ளைகளை தேடி அலைந்த சிவநேசராசா தம்பதியினர் நீதிகோரிய போராட்டங்களில் தமது பிள்ளைகளுக்கு நீதிகோரி ஈடுபட்டிருந்தநிலையில் சிவநேசராசா 2018 .04.06 அன்று உயிரிழந்தார் . சிவநேசராசா கனகம்மா 2019.03.12 அன்று உயிரிழந்தார் .

Sivanesarasa and Kanakamma's children, Sivanesarasa Vasanthakumar, Sivanesarasa Leela, and Sivanesarasa Malini became victims of enforced disappearance in Ampara on different days. The couple was engaged in protests, seeking justice for their missing children. Sivanesarasa passed away on April 06, 2018 and his wife, Kanakamma passed away on March 12, 2019.





# சபாரட்ணம் மனோன்மணி

SABARATNAM MANONMANI

அம்பாறை

வயது 74



சபாரட்ணம் மனோன்மணி (வயது74) அம்பாறையினை சேர்ந்தவர் இவரது மகன் சபாரட்ணம் ஜெகநாதன்(வயது 22) 1991 ஆம் ஆண்டு அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பகுதியில்வைத்து காணாமல் ஆக்கப்பட்டார் . மகனை தேடி போராட்டங்களில் ஈடுபட்டுவந்த மனோன்மணி 28.05.2018 அன்று மரணமடைந்தார் .

Sabaratnam Manonmani passed away on May 28, 2018. Her son, Sabaratnam Jeganathan (age 22) became a victim of enforced disappearance in Kanchikudichchaaru, Ampara in the year 1991. Manonmai engaged herself in continuous protests in search of her son until her death.





பாலசுப்ரமணியம் மங்கையற்கரசி

BALASUBRAMANIAM MANGAYARKARASI

வவுனியா புளியங்குளம்

(வயது 72)



பாலசுப்ரமணியம் மங்கையற்கரசி (72 வயது) வவுனியா புளியங்குளம் எனும் முகவரியை சேர்ந்தவர் இவர் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்த முடிவின் போது படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக் கப்பட்ட தனது ஒரேயொரு பிள்ளையான பாலசுப்ரமணியம் அருட்செல்வனை ( வயது 21) கடந்த பத்து வருடங்களாக தேடிக் கொண்டிருந்த நிலையில் வவுனியாவில் முன்னெடுக்கப்படும் போராட் டங்களிலும் பங்கெடுத்து நீதிகோருவந்த நிலையில் 03.03.2020 அன்று மரணமடைந்தார்.

Mrs. Balasubramaniam Mankayatkarasi is a native of Puliyankulam Vavuniya. Her son Balasubramaniam Arudselvan was handed over to the Sri Lankan army at the tail end of the war 2009 and there after he had gone missing. She took part in all the demonstrations for justice. She died on 03.03.2020.





செல்லையா குமார்

CHELLAIA KUMAR

பரந்தன், கிளிநொச்சி

(வயது 52)



செல்லையா குமார் (52 வயது ) பரந்தன் ,கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் 2020.05.08 அன்று மாரடைப்பால் மரணமடைந்தார். இவரது மகன் குமார் நவிசன் (16)2009 ஆம் ஆண்டு புதுமாத்தளன் பாது காப்பு வலயத்தில் காணாமல் ஆக்கப்பட்டார். கடந்த 11 வருடங்களாக குமார் நீதிகோரிய போராட்டங்களில் பங்கெடுத்து மகனை தேடி வந்தவர்

**Selliah Kumar Age-52 ,Paranthan, Kilinochchi His son Kumar Navishan, Age-16 is a permanent resident of ParanthanKilinochchi. He was made to disappear at PuthumathalanMullaithivu District.**

**Mr.Selliah Kumar who took part in the Demonstrations carried out by the "Association for the Relatives of the Enforced Disappearance " had died on 08.05.2020 due to Heart Attack.**





கண்ணுசாமி ஞானசேகரம்

KANNUSAMY GNANASEKARAM

அம்பாள்குளம் , கிளிநொச்சி

(வயது 63)



கண்ணுசாமி ஞானசேகரம் (63வயது ) அம்பாள்குளம், கிளிநொச்சி எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் ஞானசேகரம் ஜனகன் (20) 2008ஆண்டு காலப்பகுதியில் காணாமல் ஆக்கபட்டார் . மகன் காணாமல் ஆக்கபட்ட நாளிலிருந்து மகள் பற்றிய தேடல்களில் ஈடுபட்டிருந்த ஞானசேகரம் மகனை தேடி நீதி கோரிய போராட்டங்களில் பங்கெடுத்திருந்தார். 2020.07.23 அன்று விபத்து ஒன்றில் மரணமடைந்தார்.

Kannusamy Gananasekaram is the resident of Ambalkulam Kilinochchi.

His son Gananasekaram Janakan Age-20 had disappeared in 2008. Since then Kannusamy Gnanasekaram was in search of his daughter and took part in our continuous protest seeking justice for the disappearance.He met with an accident on 23-07-2020 and died.





மைக்கல் ஜேசுமேரி
MICHEL JESUMARRY
ரெட்பானா முல்லைத்தீவு
(வயது 73)



மைக்கல் ஜேசுமேரி (73) ரெட்பானா முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் மைக்கல் தோமஸ் 2009 இறுதி யுத்த காலப்பகுதியில் வட்டுவாகல் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார். காணாமல் ஆக்கபட்ட தனது மகன் பற்றிய தேடல்களில் ஈடுபட்டிருந்த ஜேசுமேரி முல்லைத்தீவில் இடம்பெற்றுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டத்தில் பங்கெடுத்திருந்த வேளை நோய்வாய்ப்பட்டு சிகிச்சைகள் பெற்று வந்த நிலையில் 2020.08.10 அன்று மரணமடைந்தார்.

Michel Jesumary Age-73 is a permanent resident of Red Baana, Mullaithivu.
Her son Michel Thomas had gone missing at Vadduvakal Mullaithivu at the tail end of the war in 2009.While she was engaged in demonstrations seeking the whereabouts of her disappeared son, She fell sick and died on 10.08.2020.





பொன்னையா நாகராசா
PONNAIAH NAGARASA
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
(வயது 61)



பொன்னையா நாகராசா (வயது-61) புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் பிரதாஸ் (18வயது ) யுத்தம் முடியும் தறுவாயில் 2009 .03.23 அன்று இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தார். அன்றிலிருந்து மகன் பற்றிய தகவல்கள் இன்றி காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடி வந்தார். அத்தோடு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனுக்கு நீதி வேண்டி தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார். இறுதியாக 2020 .04.16 அன்று மரணமடைந்தார் .

Mr.Ponniah Nagarajah is a resident of Puthukudiyiruppu, Mullaitivu. His son Nagarajah Prathaas Age 18 had voluntarily surrended himself to the Sri Lankan Army on 23.03.2009. He was searching for his son since his disappearance. Also he took part in all the demonstration held byt our "Association for Relatives of the Enforced Disappearances" for the search of the enforced disappearance. He died on 16.04.2020.





# செல்வம் சிவபாக்கியம்

SELVAM SIVAPAKKIYAM

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

(வயது 72)



செல்வம் சிவபாக்கியம்(வயது 72) புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர் இவரின் மகளின் மகனான அல்பிரட் தினு என்ற தனது பேரப்பிள்ளை 2009 இறுதியுத்த பகுதியில் வட்டுவாகல் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் ஏக்கத்தோடு ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் மழை வெயில் பனி என்று எதையுமே பொருட்படுத்தாமல் முல்லைத்தீவில் தகரக் கொட்டில்களில் நோய் நொடிகளுக்கு மத்தியில் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இவர் சில மாதங்களாக மிக மோசமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். இவர் 2020.02.26 அன்று மரணமடைந்தார்.

Mrs. Selvam Sivapakiyam Age-72 is a permanent resident of Puthukkudiyiruppu Mullaithivu.
Her grandson Alffred Dinu had gone missing in 2009 at the tail end of the war in Vadduvakal Mullaithivu.
Mrs. Selvam Sivapakiyam had engaged at our demonstrations irrespective of scorching Sun and pinching cold from the inception of our incessant struggle . She died on 26-02-2020 due to ill health.







## வெள்ளையன் அழகன்
VELLAIYAN AZHAKAN
முள்ளியவளை, முல்லைத்தீவு
(வயது 69)

வெள்ளையன் அழகன் (வயது - 69) முள்ளியவளை முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகளான அழகன் கலைச்செல்வி முள்ளிவாய்க்காலில், படையினரின் கட்டுப்பாட்டில்வைத்துக் காணாமல் ஆக் கப்பட்டார். தனது காணாமல் ஆக்கப்பட்ட மகளைத் தேடி தொடர்ந்து நீதிகோரி போராடி வந்தார் மகள் பற்றிய துன்பத்தினால் பாதிக்கப்பட்டு நோயினால் பீடிக் கப்பட்டிருந்த நிலையிலேயே 2019.11.10 அன்று திடீர் மரணமடைந்தார்.

Vellayan Alagan Age69, Mulliyawalai, Mullaitivu.
Mr.Vellayan Alagan is a permanent resident of Mulliyawalai, Mullaitivu. His daughter Alagan Kalaiselvi had gone missing in the army controlled area in Mulliwaikkal in the Mullaitivu District in the year 2009. He was engaged in continuous protest seeking justice for the release of his daughter. Mr.V.Alagan had died on 10.12.2019.





## பரமசாமி சிறீஸ்கந்தராசா

PARAMASAMY SRISKANTHARAJA

முள்ளியவளை, முல்லைத்தீவு



பரமசாமி-சிறீஸ்கந்தராசா முள்ளியவளை முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது மகனான, சிறீஸ்கந்தராசா - யுகேன் என்பவர் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில்வைத்து கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி தொடர் போராட் டங்களில் ஈடுபட்டுவந்த சிறீஸ்கந்தராசா 2019.11.11 அன்று மாரடைப்பால் மரணமடைந்தார்.

Mr.Paramasamy Sriskantharajah was a permanent resident of Mulliyawalai Mullaitivu.
His son Sriskantharajah Juhane was arrested by the Sri Lankan army at the Omanthai check post and subsequently he had gone missing. Mr.P.Sriskantharajah who was taking part in many demonstrations for the search of his son had died on 11.11.2019 due to heart attack.







சின்னையா சச்சிதானந்தன்

SINNIAH SACHITHANANTHAN

பாலையூற்று ,திருகோணமலை

(வயது 74)

சின்னையா சச்சிதானந்தன் (வயது 74) பாலையூற்று ,திருகோணமலை எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் காண்டீபன் 2009 ஆண்டு ஓமந்தையில் வைத்து காணாமல் ஆக்கபட்ட நிலையில் கடந்த 11 வருடங்களாக மகனை தேடியலைந்த நிலையில் 20.01.2020 அன்று மரணமடைந்தார்

Sinniah Sachchithananthan's son Kandeepan was arrested by the Sri Lankan forces at the Omanthai check post in 2009 while passing the checkpost with his mother.There after he had gone missing. He was in search of his son for the past eleven years and participated in the demonstrations for justice. Sinniah Sachchithanantham died on 20.01.2020 due to ill health.







## ஆறுமுகம் ரஞ்சிதம்

AARUMUGAM RANCHITHAM

கப்பல்துறை, திருகோணமலை

(வயது 40)

ஆறுமுகம் ரஞ்சிதம் (வயது 40) கப்பல்துறை, திருகோணமலை எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது காணாமல் ஆக்கப்பட்ட சகோதரன் ஆறுமுகம் மகாலிங்கத்தை தேடி தனது வயது முதிர்ந்த தாயாருடன் துணையாக இருந்துகொண்டு நீதிகோரிய தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த ரஞ்சிதம் 2020.01.09 அன்று மாரடைப்பால் மரணமடைந்தார்.

Ms.Arumugam Ranjitham age 40 is a permanent resident of Dock Yard ,Trincomalee.
Ms. Ranjitham who was insearch of her brother together with her mother had engaged in several demonstrations seeking justice for the disappeared loved ones. She had died on 09.01.2020 due to heart attack





வினாசித்தம்பி சிவகுமார்

VINASITHAMPI SIVAKUMAR

ஈச்சங்குளம், புளியங்குளம்

(வயது 60)



வினாசித்தம்பி சிவகுமார் (வயது60) ஈச்சங்குளம் வவுனியா எனும் இடத்தினை சேர்ந்தவர் இவரது மகன் சிவகுமார் யாதவகுமார் (21வயது) 2006 .12.16 அன்று வெள்ளவத்தை பிரான்சிஸ் வீதீயில்வைத்து பொலிஸ் என எழுதப்பட்ட வாகனத்தில் வந்தவர்களால் காணாமல் ஆக்கப்பட்டார். மகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் தேடுதல்களில் ஈடுபட்டுவந்த சிவகுமார் 2009 ஆம் ஆண்டு இராணுவத்தால் கைது செய்யப்பட்டு 2 வருடங்கள் தடுத்துவைக்கப்பட்டு மோசமாக தாக்கப்பட்டார் அன்றிலிருந்து மிக மோசமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் 20020 .06.29 அன்று மாரடைப்பால் மரணமடைந்தார்.

Vinasithamby Sivakumar is a permanent resident of Eachankulam ,Vavuniya. His son S.Jathavakumar Age 21, while staying in Colombo, in order to go abroad , on the 16.12.2006 he was abducted in a vehicle in which it is written as "Police". Since then he is missing. Mr.Vinasithamby Sivakumar while encaged in searching of his son Sivakumar Jathavakumar had made entries and complaints at various organizations. He was arrested by the Sri Lankan Army and detained for two years where he under went severe torture. After his release he fell sick permanently. Even though he was sick he took part in the protest for justice He died on 29.06.2020.





## சின்னச்சாமி நல்லதம்பி
### CHINNACHAMY NALLATHAMPY
கூமாங்குளம் வவுனியா

(வயது 71)



சின்னச்சாமி நல்லதம்பி (வயது71) கூமாங்குளம் வவுனியா,எனும் இடத்தினை சேர்ந்தவர் இவரது மகன் 2008 ஆம் ஆண்டு வவுனியா நீதிமன்றிலிருந்து வெளியே வரும்போது நீதிமன்றத்திற்கு முன்பாக வைத்து கடத்திச் செல்லப்பட்டார்.தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இவர் நீதிக்கான போராட்டத்தின் இடையிலேயே 2020.06.05 அன்று மரணமடைந்தார்.

Mr.Sinnasamy Nallathamby was a resident of Koomankulam, Vavuniya. His son was abducted in the year 2008 in front of the Vavuniya Magistrate court. Mr.S.Nallathamby participated in all the protests in vavuniya for seeking justice for the disappeared. He died on 05.06.2020.





# சூசைப்பிள்ளை இராசேந்திரம்

SOOSAIPPILLAI RAJENDRAM

பேசாலை, மன்னார்

(வயது 73)



சூசைப்பிள்ளை இராசேந்திரம்(வயது 73) பேசாலை மன்னார் எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது மகன் இராசேந்திரம் அன்ரனி ரஞ்சன் 2008ஆம் ஆண்டு ஓலைதொடுவாய் பகுதியில் இராணுவத்தால் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்ட நிலையில் காணாமலாக்கப்பட்டிருந்தார்.அன்று முதல் தனது மகனை தேடி மகனின் மனைவியான தனது மருமகளுடன் இணைந்து தொடர்ந்து நீதிகோரிய போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார். 03.01.2020 அன்று மரணமடைந்தார் .

Soosaipillai Rajendram, Age 73 is a resident of Pesalai Mannar. His son Rajendram Antony Ranjan was taken by the Sri Lankan forces for interrogation from Ohlaithoduvai, Mannar in the yer 2008. He had not returned back home thereafter. He took part in all demonstrations in search of his son together withbhis son's wife. He had died on 03.01.2020.







திருநாவுக்கரசு
THIRUNAVUKKARASU
செட்டிகுளம் வவுனியா
(வயது 69)

திருநாவுக்கரசு (69-வயது) செட்டிகுளம் வவுனியா எனும் முகவரியை சேர்ந்தவர் இவரது மகன் திருநாவுக்கரசு விக்னேஸ்வரன் 2008 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கடத்தி செல்லப்பட்டார். மகன் கடத்தபட்ட நாளிலிருந்து பல்வேறு வழிகளில் மகனை தேடியலைந்த இவர் வவுனியாவில் இடம்பெற்றுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தொடர் போராட்டங்களிலும் பங்கெடுத்திருந்தார். 2020 .06.23 அன்று மகன் பற்றிய பதில்கள் எதுவுமின்றி உயிரிழந்தார்
.

Mr. Thirunavukarasu Age69 is from Chettikulam, Vavuniya . His son Thirunavukarasu Vigneswaran was abducted by the Sri Lankan army in 2008. Mr. Thirunavukarasu who was in search of his disappeared had took part in many demonstrations. Mr. Thirunavukarasu had died on 23.06.2020 with out knowing any information regarding his disappeared son.





வேலுப்பிள்ளை பாலச்சந்திரன்

VELUPPILLAI BALACHANDRAN

மல்லாவி, முல்லைத்தீவு.

(வயது 65)



வேலுப்பிள்ளை பாலச்சந்திரன் (வயது 65) மல்லாவி, முல்லைத்தீவு எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது மகன் பாலச்சந்திரன் பாலபிரசாத் 2009.02.02 இறுதிப்போர் காலப்பகுதியில் இருட்டுமடுப்பகுதியில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது காணாமலாக்கப்பட்டிருந்தார். அன்று முதல் தனது மகனை தேடி நீதிகோரிய போராட்டங்களில் ஈடுபட்டு வந்த இவர் 22.01.2020 அன்று மாரடைப்பால் மரணமடைந்தார் .

Mr. Veluppillai Balachandran age 65 was a permanent resident of Mallavi, Mullaitivu. His son Balachandran Balaprasath had gone missing on the 2nd February 2009 at irudumadu in the Mullaitivu District when the Srilankan Army rounded up the said area.

Mr.Balachandran who had participated in so many demonstrations since then seeking justice for his dissapeared son hand eventually died on 22.01.2020 due to heart attack.





இராசதுரை விஜயமணி

RASATHURAI VIJAYAMANI

எழுத்தூர், மன்னார்

(வயது 58)



இராசதுரை விஜயமணி (வயது 58) எழுத்தூர் மன்னார் எனும் முகவரியை சேர்ந்தவர். இவரது மகன் விஜயகுமார் 15.02.1998 காலப்பகுதியில் வேலணை, யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார். அன்று முதல் தனது மகனை தேடி நீதிகோரிய போராட்டங்களில் ஈடுபட்டு வந்த இவர் 2020.09.15 அன்று மாரடைப்பால் மரணமடைந்தார்.

Mrs. Rasathurai Vijayamani age 58 was a resident of Ezhuthur, Mannar. Her son Rasathurai Vijayakumar had been abducted on 15.02.1998 in velanai in the Jaffna District wich wasfully controlled by the srilankan forces then.

Mrs. Rasathurai Vijayamani had participated in numerous demonstrations since then seeking justice for her dissapeared son had died on 2020.09.15 all of a sudden.





Published by: Association for the "Relatives of the Enforced

Disappearances " North &East Provinces